லிங்கபைரவி

# இறந்தவர்களுக்கான சடங்குகள்

## நேரிலோ ஆன்லைனிலோ அர்ப்பணிக்கலாம்

“உயிருடன் வாழ்பவர்கள் குறித்து நமக்கு பொறுப்புகள் இருப்பது போலவே, இறந்துபோனவர்களைக் குறித்தும் நமக்கு பொறுப்புகள் இருக்கின்றன. மரணத்திற்குப் பின் குறிப்பிட்ட காலத்திற்குள், இறந்தவர்கள் மீது தாக்கம் ஏற்படுத்த வாய்ப்புள்ளது.”

சத்குரு



## வாழ்விலும் வாழ்விற்கு அப்பாலும் உயிரைப் பேணுதல்

கோயம்புத்தூரில் உள்ள லிங்கபைரவி இறந்தவர்களுக்கான சில சடங்குகளைச் செய்ய சக்தி ஆதாரமாக பயன்படுத்தப்படுகிறது. இந்த சடங்குகள் இறந்தவர்களுக்கும் அவர்களின் இரத்த சொந்தங்களுக்கும் இடையே உள்ள ருணானுபந்தத்தை (ஞாபகப் பதிவுகள்) கரைப்பதற்காக செய்யப்படுகிறது. இது இறந்தவர்களுக்கும் அவர்களின் சொந்தங்களுக்கும் பயனளிக்கும்.

**சத்குரு:** “கடந்த காலத்திற்கு அதற்கே உரிய பலம் இருப்பதை நாம் உணர்ந்துள்ளதால், நமது கலாச்சாரத்தில் எப்போதுமே ஒருவர் இறந்தவுடன் ருணானுபந்தத்தை அகற்றிட விரும்புகிறோம். அதிலிருந்து உங்களை விடுவித்துக்கொள்ளவில்லை என்றால், கடந்த காலம் உங்கள் எதிர்காலத்தை ஆட்டிப் படைக்கும். இந்த பதிவுகள் உங்கள் மனதில் மட்டுமல்ல, உடலிலும் சக்திகளிலும் கூட இருக்கின்றன. எனவே, நீங்கள் இதிலிருந்து விடுபட வேண்டும் என்பதும் இறந்தவர்களுக்கான சடங்குகளின் ஒரு முக்கிய அம்சமாகும்.”

***இறந்தவர்களுக்கான சடங்குகளை லிங்கபைரவியில் செய்த பிறகும், வழக்கமான குடும்பசடங்குகளை வீட்டில் மேற்கொள்ளலாம்.



# காலபைரவ கர்மா

இந்த சடங்கு தேவியின் அருளை உள்வாங்கிக்கொண்டு, இறப்புக்குப் பின் குறிப்பிட்ட கால வரம்புக்குள் செய்யப்படுகிறது. இது லிங்கபைரவியிலும், இதற்கென்று அமைக்கப்பட்ட நிர்காய ஸ்தானத்திலும் நிகழ்த்தப்படுகிறது.

இயற்கை மரணம், அகால மரணம் இரண்டு விதமான நிகழ்வுகளிலும், ஒரு பரிமாணத்திலிருந்து இன்னொன்றிற்கான மாற்றம் சுலபமாக, இதமாக அமைய உதவுகிறது.

## காலவரம்பு

இந்த செயல்முறை இறப்புக்குப் பின் குறிப்பிட்ட காலத்திற்குள் செய்யப்பட வேண்டும். மரணத்தின் தன்மையைப் பொருத்து 14 முதல் 90 நாட்கள் வரையிலோ அல்லது காலக்கெடு ஏதுமின்றியோ செய்யப்படலாம். விரிவான விளக்கத்தை வெப்சைட்டில் காணலாம்.



## தேவையானவை:

- இறந்தவரின் புகைப்படம் (அவர் உயிருடன் இருந்தபோது எடுக்கப்பட்டது)
- அவர் அணிந்திருந்த துணி (உள்ளாடை, புடவை மற்றும் இறந்த போது அணிந்திருந்த ஆடைகள் கூடாது)
- இறந்தவரின் இரத்த சொந்தமான ஒருவர் இந்த நிகழ்வில் கலந்துகொள்ள வேண்டும் (முடிந்தவரை)
- இறந்தே பிறந்த குழந்தைகள் அல்லது கருக்கலைப்புகளுக்கு (கருவுற்று 48 நாள் கழித்து நடந்தால்) அந்த கர்ப்பகாலத்தில் எடுக்கப்பட்ட தாயின் புகைப்படம் வேண்டும். அது இல்லை என்றால், தாயின் வேறு ஏதாவது புகைப்படமும் ஏற்றுக்கொள்ளப்படும்.

## குறிப்பு:

- கர்ப்பிணிப் பெண்களும், மாதவிடாய் காலத்தில் இருக்கும் பெண்களும் காலபைரவ சாந்தியில் கலந்துகொள்வது உகந்ததல்ல என்பதால் அதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.
- சடங்கு முடிந்தபின் இறந்தவரின் குடும்பத்தினருக்கு அஸ்தி பிரசாதம் வழங்கப்படும்.
- காலபைரவ கர்மா இறந்தவர்களுக்கானது மட்டுமே.
- இந்த சடங்கு விலங்குகளுக்கு, செல்லப்பிராணிகளுக்கு செய்யப்படமாட்டாது.

மேலும் அறிய QR Code-ஐ Scan செய்யவும்

bhairavi.co/karma



# காலபைரவ சாந்தி

இந்த சடங்கை இறப்பிற்கு பின் எந்த நேரத்திலும் செய்யலாம், குறிப்பாக காலபைரவ கர்மாவிற்கான காலக்கெடு முடிந்த பிறகு செய்யலாம். இது ஒவ்வொரு அமாவாசையன்றும் நள்ளிரவு சந்தியா காலத்தில் நடத்தப்படுகிறது.

மேலும் இதனை ஒவ்வொரு மாதமும் அல்லது ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து செய்யலாம். வருடாந்திர காலபைரவ சாந்தி மஹாளய அமாவாசை அன்று நடத்தப்படுகிறது.

## தேவையானவை:

- இறந்தவரின் புகைப்படம் (உயிருடன் இருந்தபோது எடுக்கப்பட்டது - குழு புகைப்படம் ஏற்றுக்கொள்ளப்படாது)
- இறந்தவரின் பெயர், பிறந்த தேதி அல்லது பிறந்த ஆண்டு (துல்லியமாக), இறந்த தேதி அல்லது இறந்த ஆண்டு (துல்லியமாக) அல்லது இறந்தவரின் தாய்-தந்தை பெயர்கள்
- இறந்தே பிறந்த குழந்தைகள் அல்லது கருக்கலைப்புகளுக்கு (கருவுற்று 48 நாள் கழித்து நடந்தால்), அந்த கர்ப்பகாலத்தில் எடுக்கப்பட்ட தாயின் புகைப்படம் வேண்டும். அது இல்லை என்றால், தாயின் வேறு ஏதாவது புகைப்படமும் ஏற்றுக்கொள்ளப்படும்.

## குறிப்பு:

- கர்ப்பிணிப் பெண்களும், மாதவிடாய் காலத்தில் இருக்கும் பெண்களும் காலபைரவ சாந்தியில் கலந்துகொள்வது உகந்ததல்ல என்பதால் அதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.
- காலபைரவ சாந்திக்கு அடுத்த 12 மாதங்களுக்கோ அல்லது 10 ஆண்டுகளுக்கோ ஒரே நேரத்தில் பதிவு செய்துகொள்ளலாம்.

மேலும் அறிய QR Code-ஐ Scan செய்யவும்
bhairavi.co/shanti

# அக்னி அர்ப்பணம்

நம் வாழ்வை வளப்படுத்திய முன்னோர்களுக்கு, நாம் அறிந்த, நாம் அறியாத பல தலைமுறையினருக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக லிங்கபைரவியில் செய்யப்படும் அர்ப்பணம் இது. பெயரோ மற்ற பிற விவரங்களோ தெரியாதவர்கள் உட்பட, மறைந்த அனைத்து உறவினர்களுக்காகவும் இந்த அக்னி அர்ப்பணத்தைச் செய்யலாம்.

இந்த அர்ப்பணம் மஹாளய அமாவாசை (செப்டம்பர்-அக்டோபர்), தை (மௌனி) அமாவாசை (ஜனவரி-பிப்ரவரி) மற்றும் ஆடி அமாவாசை (ஜூலை-ஆகஸ்ட்) ஆகிய நாட்களில் நடைபெறும்.

மேலும் அறிய QR Code-ஐ Scan செய்யவும்

bhairavi.co/agni



# மஹாளய அமாவாசை

நமது வாழ்க்கைக்கு பங்களித்த முந்தைய தலைமுறையினரை கௌரவிக்கும் வகையில், அவர்களுக்கு அர்ப்பணங்கள் செய்யும் காலமான பித்ரு பட்சத்தின் நிறைவு நாளாக இருப்பதால், இந்த நாள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

லிங்கபைரவியில் மஹாளய அமாவாசை அன்று சிறப்பு வருடாந்திர காலபைரவ சாந்தி நடத்தப்படுகிறது.

“மஹாளய அமாவாசை, நமது முன்னோர்களிடம் இருந்து மரபணு ரீதியாக இடைவெளியை ஏற்படுத்திக்கொள்வதற்கான நாள். அவர்களையும் அவர்களின் பங்களிப்புகளையும் நாம் மதிக்கிறோம். ஆனால், நமது வாழ்க்கையை நாமே வாழ்ந்துகொள்ளலாம் என்பதற்காக, அவர்களின் தாக்கத்தை குறைக்க விரும்புகிறோம்.”

சத்குரு

பக்தர்கள் இந்த நாளில் தேவிக்கு நேரடியாகவும் ஆன்லைன் வழியாகவும் பல்வேறு அர்ப்பணங்களை செய்யும் வாய்ப்பு உள்ளது.

மேலும் அறிய QR Code-ஐ Scan செய்யவும்

bhairavi.co/ma



## வாழ்விலும் வாழ்விற்கு அப்பாலும் உயிரைப் பேணுதல்

“என் ஒரே மகனை இழந்துவிட்டேன். என் இளமை காலத்தில், வறுமையில் வாழ்ந்தேன். இன்று, என் மகன் நன்றாக வாழ வீடு, பணம் என எல்லாமே இருக்கும்போது அவன் போய்விட்டான். ஒரு அம்மாவாக, இந்த இழப்பால் நான் வெறுமையாகவும், பாரமாகவும் உணர்ந்தேன். நான் சடங்குகளோ பூஜைகளோ செய்பவராக ஒருபோதும் இருந்ததில்லை என்றாலும், என் மகனுடைய ஆன்மா சாந்தியடைய ஏதாவது செய்ய விரும்பினேன். காலபைரவ கர்மா செய்ததன் மூலம், அவனுக்கு ஒரு அமைதியான சூழல் உருவாக்கப்பட்டது, அதற்குப் பிறகு நான் கொஞ்சம் நிம்மதியாக உணர்கிறேன். என் குடும்பத்தினரும் கூட என்னில் ஏற்பட்ட மாற்றத்தைக் காண முடிந்தது.”

**திருமதி. அருணா கந்தசாமி, கரூர்**

“எங்கள் அம்மாவின் ஆன்மா சாந்தியடைய வேண்டும் என்று விரும்பினோம், காலபைரவ கர்மாவை செய்தோம். சடங்குகளை செய்யும்போது, என் உடலும் மனமும் மிகவும் இலேசாக இருந்ததை உணர்ந்தேன். பொதுவாக ஆண் பிள்ளைகள் மட்டுமே கர்மாவைச் செய்ய முடியும், ஆனால் இவர்கள் பெண்களுக்கும் அந்த வாய்ப்பை வழங்கியுள்ளனர். என் அம்மாவுக்காக ஏதோ ஒன்று செய்ய முடிந்ததில் நான் மனநிறைவாக உணர்கிறேன்.”

**திருமதி. L. லக்ஷ்மி, சென்னை**

கோவை ஈஷா யோக மையத்திற்குள் தங்கும் வசதிகளுக்கு இங்கே பதிவு செய்யுங்கள்
cottage.isha.in

**ஸ்ரீ யோகினி டிரஸ்ட்,**
லிங்கபைரவி, பூண்டி,
கோயம்புத்தூர் - 641114, இந்தியா.

info@lingabhairavi.org
+91 83000 83111
lingabhairavi.org